பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் இட்டேரி கிராம ஊராட்சி
ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி.E.பேச்சியம்மாள்

ந.க.எண்:இ.ஊ. / ம.பி.அ02/ 02/2024 நாள் : 02.02.2024

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – திருநெல்வேலி மாவட்டம்,பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் இட்டேரி கிராம ஊராட்சி இட்டேரி கிராமம் சர்வே எண் 323/4A,5A, 329/4ல் 3336 ச.மீ (1.02 ஏக்கர்) குடியிருப்பு மனைப்பிரிவு DTCP தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் வரைபடங்களுக்கு ம.வ/ திலி.மா.ஊ.அ.எண் SWP/03/24 என எண்ணிட்டு வரப்பெற்றது இறுதி ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக...

பார்வை :

1.அரசாணை (நிலை) எண்.71 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை
நாள் : 16.08.2003
2..அரசாணை (நிலை) எண்.255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை
நாள் : 18.08.1997
3.திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குனர் செயல்முறை ஆணைகள்.
ந.க.எண் YG24LKDE/2023/TCP
4. இட்டேரி கிராம ஊராட்சி மன்ற தீர்மானம் எண்: 02.02.2024.

ஆணை

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் இட்டேரி கிராம ஊராட்சி இட்டேரி கிராமத்தில் சர்வே எண் 323/4A,5A, 329/4ல் 3336 ச.மீ 1.02 ஏக்கர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இணை இயக்குனர் /உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு உள்ளூர் திட்ட குழுமம் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் வரைபடங்களுக்கு ம.வ.(தி.லி) மா.எண் என எண்ணிற்று வரப்பெற்றுள்ளது.

இம்மனைப்பிரிவு 3336 ச.மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் மனைகள் 15 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் மூலை முடுக்கு பரப்பு 786.40 ச.மீ உள்ளாட்சிக்கு பொது உபயோக ஒதுக்கீடு 29.50 ச.மீ மின் வாரியத்திற்கு 23.55 ச.மீ பூங்கா 343.05 ச.மீ பரப்பளவு உள்ள நிலம் ஊராட்சிக்கு தானபத்திரப்பதிவு எண் 226/2024 நாள்: 10.01.2024ன் மூலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இம்மனைப் பிரிவிற்கு இட்டேரி கிராம ஊராட்சி Layout கட்டணம் சதுர மீட்டருக்கு (1.02 ஏக்கர்) ரூ.2000 மற்றும் மனை ஒன்றுக்கு ஆயிரம் வீதம் 15 மனைகளுக்கு ரூ.15000 விண்ணப்பபதிவு மற்றும் ஆய்வுக் கட்டணம் ரூ.1000 மற்றும் வழிகாட்டி மதிப்பு 3% ரூ.56,053 ஆக மொத்தம் ரூ.74,053 (எழுபத்து நான்காயிரத்து ஐம்பத்தி மூன்று) ஊராட்சி நிதி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. இணை இயக்குனர் /உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திருநெல்வேலி உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் கடித ந.க. எண். YG24LKDE/2023/TCP நாள்:20.01..2024 திலிமா3 குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

2.மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற கோப்பு ந.க.எண். YG24LKDE/2023/TCP நாள்:20.01..2024. குறிப்பிட்ட மனைகள் விற்பனை மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும்.

3.மனைப்பிரிவிற்கு கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்தவேண்டியது அறியப்பட்டால் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.

4.அரசாணை எண்.78,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை நாள் 04.05.207ல் குறிப்பிடப்பட்டுள்ள மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் விதி எண்.4 மற்றும் 6ல் குறிப்பிடப்பட்டுள்ள

இனங்கள் பாதிக்கும் வண்ணம் இருப்பின் அந்த மனையின் வரன்முறை எவ்வித முன்னறிவிப்புமின்றி உடனடியாக ரத்து செய்யப்படும்.

5.நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு மனுதாரரை சார்ந்ததாகும்.

6.மனைப்பிரிவின் ஊடே முழுமைத்திட்ட / விரிவு அபிவிருத்தி திட்ட சாலைகள் மற்றும் பூங்கா அமையுமாயின் அம்மனையின் வரன்முறை எவ்வித முன்னறிவிப்புமின்றி உடனடியாக ரத்து செய்யப்படும்.

7.மனைப்பிரிவிற்கு மற்றும் மனைகளுக்கு செல்லும் அணுகுசாலை குறித்தான உரிமம் மனுதாரரால் உறுதி செய்து கொள்ளப்படவேண்டும்.

8.நீதிமன்ற வழக்கு ஏதும் இருப்பின் அது மனுதாரரை சார்ந்ததாகும்.

9.மனைப்பிரிவுகளின் ஊடே உயர் அழுத்த கம்பி பாதை கோபுர பாதை செல்லுமாயின் அம்மனையின் வரன்முறை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

10. மனைப்பிரிவுகளின் ஊடே போக்கு கால்வாய் அமையுமாயின் அதற்கு இடையூறின்றி பாதுகாக்கப்படவேண்டும்.

F. லெக்சியம்மாள்

தலைவர்
இட்டேரி கிராம ஊராட்சி
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

இணைப்பு :

1.திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குனர் செயல்முறை ஆணை.

2.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்.

பெறுநர்:

திருமதி.மேரி ஜாய்ஸ்,

திரு.ஹெர்பர்ட் நியுட்டன்,

திருமதி.ஆரோக்கிய செல்வராணி

7/47,லூயிஸ் தெரு,அழகப்பபுரம்,

கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்:

1.இணை இயக்குனர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,சேவியர் காலனி, தெற்கு புறவழிச்சாலை,திருநெல்வேலி – 627005.

2.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை.

3.உதவி இயக்குநர்,நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மாவட்ட பதிவேடுகள் துறை,மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்.

4.வட்டாட்சியர், பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.